# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 91 — 1973 දෙසැම්බර් 21 වැනි සිකුරාදා — 1973.12.21

91 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ம் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II ஆ)—விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1381 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | — | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | 1387 | ஏலவிற்பனைகள் | — |
| ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் | — | நானாவித அறிவித்தல்கள் | — |


## கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*சிறைச்சாலைப் பகுதி*

*வெலிக்கடைச் சிறைச்சாலை கைத்தொழில் மேலதிகாரி, கொழும்பு 9 ல் விற்பனைக்குள்ள வெற்றுச்சாக்குகள், தாறுப்பீப்பாக்கள், வெற்றுத் தகரங்கள், போத்தல்கள், அரைவட்ட நாட்டு ஓடுகள் சம்பந்தப்பட்ட ஏலவிற்பனை*

*வெலிக்கடைச் சிறைச்சாலை கைத்தொழில் மேலதிகாரி கொழும்பு 9, 11.01.1974 முற்பகல் 10.30 மணிவரையும் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்களை ஏலத்தில் விற்பதற்கு விண்ணப் பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளுவார்.*

| | | |
|---|---|---|
| 1. | வெற்று சீமேந்து உறைகள் | 1000 |
| 2. | வெற்றுத் தாறுப்பீப்பா | 9 |
| 3. | வெற்றுத் தகரங்கள் (1 அந்தர்) | 65 |
| 4. | வெற்றுத் தகரங்கள் (5 கலன்) | 15 |
| 5. | வெற்றுத் தகரம் (4 கலன்) | 40 |
| 6. | வெற்றுத் தகரம் (1 கலன்) | 40 |
| 7. | வெற்றுப் போத்தல் | 100 |
| 8. | வெற்றுச் சாக்குகள் | 1500 |
| 9. | வெற்று உப்புச் சாக்குகள் | 50 |
| 10. | கன்வஸ் மிகுதித் துண்டுகள் | 1 கட்டு |
| 11. | மிகுதி இரும்புத் துண்டுகள் | 1 குவியல் |
| 12. | அரை வட்ட நாட்டு ஓடுகள் | 3000 |

*2. விண்ணப்பிப்போர் முற்பணமாக ரூபா 50/- இக்காரியாலயத் தில் 10.1.74 பிற்பகல் 2 மணிக்கு முன் கட்டிப் பற்றுச்சீட் டைப் பெற்றுக் கொள்ளவும். அந்தப்பற்றுச் சீட்டைச் சமர்ப் பித்தே விண்ணப்பப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம். விற்பனை செய்த பொருட்கள் 7 நாட்களுக்குள் உரிய பணத்தை கட்டி எடுக் கப்படாவிடின் அப்பொருட்களும் முதலும் அரசாங்கத்துக்குரிய தாக்கப்படும். கட்டிய முற்பணம் விற்பனையின் பின் பொருட்கள் எடுக்கும்போது திருப்பிக் கொடுக்கப்படும்.*

*3. விண்ணப்பகாரர் வெவ்வேறுக ஒவ்வொன்றிற்கும் விலை குறிப் பிட வேண்டும். விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அனுப்பும் உறையில் மேல் இடது மூலையில் மேற்குறிப் பிட்ட பொருட்களில் எப்பொருட்களுக்கென பெயர் குறிப்பிடப் பட்டு அனுப்பப்பட வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்ப பத்தி ரங்கள் வழங்கப்படமாட்டாது.*

*4. 11.1.74 முற்பகல் 10.35 மணிக்கு வெலிக்கடைச் சிறைச் சாலை கைத்தொழில் அதிகாரியின் காரியாலயத்தில் விண்ணப்பங் கள் திறந்து பார்வையிடப்படும். விண்ணப்பங்கள் திறக்கப்படும் போது விண்ணப்பித்தவர்கள் சமூகமளிக்க அனுமதி வழங்கப் படும்.*

*5. இது விடயம் பற்றிய ஏனைய விபரங்களை கீழ்க் குறிப்பிடப் பட்டிருக்கும் விலாசகாரரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.*

*ஈ. எல். பெரேரா,*
*சிறைச்சாலைக் கைத்தொழில் அதிகாரி.*

*கைத்தொழிற் பகுதி,*
*வெலிக்கடைச் சிறைச்சாலை,*
*பேஸ்லைன் வீதி, கொழும்பு 9.*

*12-753—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91*

---

### முக்கிய அறிவித்தல்

**இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக் கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத் திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.**

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

1974.01.01 தொடக்கம் 1974.12.31 வரையான காலத்திற்கு பின்வருவனவற்றை வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின் துறைமுக மாக்கல் கண்காணிப்பாளரினால் கோரப்படுகின்றன :—

1. நாளொன்றுக்கு 120 இருத்தல் வீதம், வாரத்திற்கு விதித்துரைக்கப்படும் இரண்டு நாட்களுக்கு எலும்பில்லாத மாட்டிறைச்சி.

மீளப்பெறத்தக்கதான வைப்புப் பணமாக ரூபா 100 செலுத்திக் கீழே ஒப்பமிட்டிருப்பவரிடமிருந்து மேலதிக விபரங்களையும் கேள்விப் பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் பின்வரும் ஆவணங்களைக் காட்டும் வண்ணம் கேட்கப்படுவார் :

(i) உள்ளூராட்சிச் சபைகளால் வழங்கல் முறைமையை அங்கிகரிக்கும் சான்றிதழ் ;

(ii) கொழும்பு மாநகர சபையின் தலைமை மிருக வைத்தியரால் கொழும்பு மாநகர எல்லைக்குள் அமைந்துள்ள தாபனங்களுக்கு இறைச்சி வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்ட சான்றிதழ்.

கேள்விப் பத்திரங்கள் 1974.01.04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு மூடப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
1973.12.10.

12-708—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### சிறைச்சாலை பகுதி

மாறைச் சிறைச்சாலையில் வெறும் சாக்கு, வெறும் சீமந்து பைகேற், வெறும் அரை ரின் பேக்கரி கோம்பவுண், வெறும் ரின், வெறும் போத்தல், ஐந்து கலன் ரின் ஆகியவை விண்ணப்பம்.

கீழ்குறிப்பிடும் பொருட்களை வாங்குவதற்கு 'விண்ணப்பங்கள் 1974 ம் ஆண்டு தை மாதம் 11 ம் திகதி காலை 10.30 மணிவரை சிறைச்சாலை அதிகாரியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | | |
|---|---|---|
| 2. | வெறும் சாக்குகள் | 1500 |
| | வெறும் சீமந்து பைகேற் | 100 |
| | வெறும் அரை ரின் | 40 |
| | பேக்கரி கோம்பவுண் வெறும் ரின் | 20 |
| | வெறும் போத்தல் | 10 |
| | ஐந்து கலன் ரின் | 3 |

3. விண்ணப்பிப்போர் முற்பணமாக ரூபா 25 ஐ இக்கந்தோரில் கட்டி அந்த ரசீத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். பொருட்கள் விற்பனை செய்தபின் 7 நாட்களுக்குள் அவைகள் எடுக்கப்படாவிடின் அப்பொருட்களும் முதலும் அரசாங்கத்துக்கு உரியது.

(i) விண்ணப்பதாரர் தங்கள் விலாசத்தை விண்ணப்பம் அனுப்பும் உறையில் குறிப்பிட வேண்டும்.

(ii) கட்டிய முற்பணம் விற்பனையின் பின் பொருட்கள் எடுக்கும் போது திருப்பிக் கொடுக்கப்படும்.

4. விண்ணப்பகாரர் வெவ்வேறாக ஒவ்வொன்றிற்கும் விலை குறிப்பிட வேண்டும்.

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அனுப்பும் உறையில் மேலே இடது பக்கத்தில் மேற்குறிப்பிட்ட பொருட்களில் எவையென விண்ணப்பம் எனக் குறிப்பிட வேண்டும். அச்சிடப்பட்ட விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.

5. சிறைச்சாலை அதிகாரி 1974 ஆம் ஆண்டு தை மாதம் 11 ம் திகதி காலை 10.35 மணிக்கு விண்ணப்பங்களைப் பார்வையிடுவார். அந்நேரம் விண்ணப்பதாரர் விண்ணப்பங்களைப் பார்வையிட அனுமதிக்கப்படுவர்.

6. இதைப் பற்றிய வேறு விபரங்கள் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. டி. ஜயவர்ஸ்,
அதிகாரி, மகாரைச் சிறைச்சாலை,
தொலைபேசி இலக்கம் 257—281.

12-752—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழுவின்/கப்பல்கட்டும் கலம் "பாரன்" இன் விற்பனைக்கான என்னுமிடத்தில் கேள்விப் பத்திரங்களைக் கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு கேள்விச் சபைத் தலைவர் 1974.01.24 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

1974.01.24 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்பொழுது கேள்வியாளர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

கேள்விப் பத்திரங்களைப் பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத கேள்வியாளர்கள் கேள்விச் சபைத் தலைவரால் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரிடம் கேள்விப் பத்திரங்களை நேர்முகமாகக் கொடுத்து அவைகளை அவர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புக்கூற்றை எழுத்து மூலம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். அல்லது அவர் நேர்முகமாக வந்து தங்களின் கேள்விப் பத்திரங்களை இத்திணைக்கள கேள்விப் பத்திரப் பெட்டியில் சேர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு அலுவலகத்தில் கேள்வி சம்பந்தமான சாதனங்களைப் பார்வையிடலாம். கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250 கொழும்பிலுள்ள கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு சிறுப்பர் வழங்கிய பற்றுச்சீட்டுடன் கொழும்பு கப்பற்றுறை ஆணையாளருக்கு விண்ணப்பஞ் செய்வோருக்குக் கேள்விப் பத்திரப் படிவங்கள் வழங்கப்படும். கேள்வி வைப்புப் பணம் கேள்வி நிபந்தனைகளுக்கேற்ப திருப்பிக் கொடுக்கப்படும்.

மேலே குறிப்பிட்ட பிரகாரம் பெற்றுக் கொள்ளப்படும் படிவங்களில் கேள்விப் பத்திரங்கள் இருத்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான சாதனங்கள் 1974.01.22 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை வழங்கப்படும்.

எஸ். எம். பி. தொலபிஹில்ல,
பதில் கப்பற்றுறை ஆணையாளர்.

கொழும்பு கப்பற்றுறை ஆணைக்குழு,
கொழும்பு 1,
11.12.1973.

12-707—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

## சிறைச்சாலைத் திணைக்களம்

1974 ம் நிதியாண்டில் யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு மீன் விநியோகிப்ப தற்கான கேள்விப்பத்திரங்கள் இலங்கையரிடமிருந்து (இலங்கையர் என் பவர் வம்சாவழியாகவோ அல்லது பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாய் இருப்பவராகும்) மேற்கூறிய சிறைச்சாலைக்கு 10.1.74 ல் இருந்து 31.12.74 வரைக்கும் உணவுப் பொருட்களை விநியோகிப்பதற் கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

2. வழங்கப்பட வேண்டிய பொருள்கள் பின்வரும் பட்டோலைகளின் கீழ் வகுக்கப்பட்டுள்ளது.

**பட்டியல் " ஐ "**

(i) மீன்,

(ii) கருவாடு.

3. எல்லாக் கேள்விப்பத்திரங்களும் மூலமும் பிரதியுமாக இரண்டும் ஒரே உறையில் வைத்து, தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்று முகவரியிட்டிருத்தல் வேண்டும். ஒரு விண்ணப்பப் பத்திரத்தில் ஒரு பட்டியலுக்குரிய விலை வீதம் மட்டுமே பொருளடக்கம் செய்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண் டும்; அல்லது கேள்விப்பத்திரக்காரர் அல்லது அவருடைய பிரதிநிதி நேர்முகமாகச் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை அதிகாரி, ஜே. பி. டெல்கொடை அவர்களிடம் நேரில் கையளித்து அதற்கான பற்றுச்சீட்டைப் பெறுதல் வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் அடங்கிய உறையில் இடதுகை மேல் பக்கத் தில் "......... சிறைச்சாலை ........ பட்டியலில் உள்ள உணவுப் பொருட்கள் விநியோகம்" என்று குறிப்பிட்டுத் தலைவர், கேள்விச்சபை, சிறைச்சாலைத் திணைக்களம், கொழும்பு 9 என்ற முகவரிக்கு 9 ஆம் பந்தியில் குறிப்பிட்ட திகதியன்று காலை 10.30 மணிக்கு முன்னதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி, நேரத்திலிருந்து 5 நிமிடங்களுக்குப் பின், அதாவது காலை 10.35 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரக்காரர்கள் விரும்பினுல் அந்த நேரத்தில் பிரசன்னமாயிருக் லாம்.

6. கேள்விப்பத்திரங்கள் கொழும்பு 9 இல் இருக்கும் சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயத்தில் சிறைச்சாலை ஆணையாளரால் விநியோ கிக்கப்படும் பத்திரத்திலேயே இருக்க வேண்டும். அப்படி இல்லாத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. 9 ம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலையங்களுக்குரிய கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்தினம் மாலை 2:00 மணி வரையிலுமே கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும்.

7. கேள்விப் பத்திரங்களில் கொடுக்கும் வீதங்களை முடிவுத் திகதி யிலிருந்து மூன்று மாதங்களுக்குத் திறந்து வைத்திருக்க வேண்டும் என்பதை கேள்விப்பத்திரகாரர் கவனித்தல் வேண்டும்.

8. கேள்விப்பத்திரத்தில் ஏதேனும் மாற்றங்கள் அல்லது தேய்த் தழித்தல் செய்தால் அவற்றிற்கெல்லாம் முதலெழுத்தொப்பம் இருத் தல் வேண்டும்.

9. கேள்விப்பத்திரங்களைப் பெறுவதற்கு மேலே குறிக்கப்பட்டுள்ள பட்டோலையின் பிரகாரம் முற்பணத்தைச் சிறைச்சாலைத் திணைக்களத் திலோ கச்சேரியிலோ (கொழும்புக் கச்சேரியைத் தவிர) கட்டிப் பற்றுச் சீட்டைப் பெற்று அதனைக் காண்பித்தல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் எந்தக் கேள்விப்பத்திரகாரரேனும் அவர்களுடைய கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென எழுத்தில் அறிவித்தபின் 10 நாட்க ளுக்குள் கீழே குறிப்பிட்ட பிணைக் கட்டுப்பணத்தைக் கட்டத் தவறினுல் அல்லது கட்ட மறுத்தால் அவர்கள் முற்பணமாகக் கட்டிய தொகையை அரசாங்கத்திற்கு இழந்துவிட நேரிடுவதோடு, அரசாங்க ஒப்பந்தம் எதனுேடும் சம்பந்தமில்லாதவர்களாகக் கருதப்பட்டு தவறிய ஒப்பந்த காரர் என்று கருதப்படும் பட்டியலில் அவர்கள் பெயர் சேர்க்கப்பட நேரிடும். மேலும் கேள்விப்பத்திரக்காரர் இலங்கை அரசாங்கத்தின் சார்பாகக் கடமைபுரியும் சிறைச்சாலை ஆணையாளருக்கு இலங்கை நாணயம் ரூபா மூவாயிரம் (ரூபா 3,000) தண்டப் பணமாகச் செலுத்த நேரிடும். இப்பணத்தைச் சட்டவிதிப்படி அறவிடப்படும். கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டதென்ற செய்தியைக் கேள்விப்பத்திரத்தில் கொடுக் கப்பட்டுள்ள முகவரிக்குத் தபால் மூலமாக அல்லது நேரிலோ அனுப்பப் பட்டால் அது அவருக்குக் கிடைத்ததென்று கருதப்படும். மற்றும் எல்லா முற்பணமும் கையொப்பமிட்டவுடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

| பட்டியல் | | கேள்விப்பத்திர முற் பணம் ரூபா | | பிணைப் பணம் ரூபா | | கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியும் திறக்கப்படும் திகதியும் |
|---|---|---|---|---|---|---|
| ஐ | .. | 50 | .. | 1,000 | .. | 2.1.1974 |

10. விநியோகம் செய்ய விரும்பும் வீதத்தை இலக்கத்திலும் சொல்லி லும் குறிப்பிடல் வேண்டும். இலக்கத்திற்கும் சொல்லிற்கும் வித்தி யாசம் இருப்பின் அல்லது வீதத்தைச் சொல்லில் குறிப்பிடத் தவறினுல் அக்கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.

11. ஏற்றுக்கொண்டவுடன் கேள்விப்பத்திரக்காரர்கள் தாங்கள் ஒப் பந்தத்தைச் சரிவர நடத்தி முடிப்பார்களெனப் பிணை நிற்கக்கூடிய இரண்டு பொறுப்பானவர்களின் பெயர்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் சரிவர நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டு, பிணை சேர்ந்த ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். பிணைப் பணத்தின் விபரம் 9 ம் பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வேண்டிய விபரங்களை 6 ம் பந்தியில் குறிப்பிட்ட அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ளவும்.

13. கேள்விப்பத்திரங்கள் எல்லா நிபந்தனைகளுக்கும் அடங்கியிரா விடில் நிராகரிக்கப்படும்.

14. கேள்விப்பத்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லாவற்றை யுமோ அல்லது ஒரு கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியையோ ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.

15. கேள்விச் சபையின் அனுமதியில்லாமல் ஒப்பந்தத்தை உப வாடகைக்கு அனுமதிக்கப்படமாட்டாது. ஒப்பந்தகாரினுல் இன்னொரு வரைத் தன் சார்பாக கடமையாற்றும்படி கொடுக்கப்படும் தத்துவ அதிகாரத்தை நிராகரிக்க அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.

16. ஒப்பந்தத்தின்படி சேவையை நிறைவேற்றுவதற்காக "இலங்கை யரையே" சேவையில் ஈடுபடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட நிலையங்களின் அதிகாரிகள், ஒப்பந்தகாரினுல் நியமிக்கப்பட்ட தொழிலாளி யாரேனும் ஏற்றுக்கொள்ளச் சம்மதமில்லாவிட்டால், அதனை ஆட்சேபித்து எழுத்தில் கொடுத்தால், ஒப்பந்தக்காரர் அதன்படி குறிப்பிட்ட தொழிலாளிகளை சேவையில் ஈடுபடுத்தல் ஆகாது.

17. இதற்கு முன் அரசாங்க ஒப்பந்தத்தைச் செய்யாத ஒரு கேள்விப் பத்திரக்காரர் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கும்பொழுது தன் னுடைய சொத்துக்களின் பெறுமதியை, காணிகள் எந்தெந்த வட்டாரத் திலுள்ளன என்பதைக் குறித்து, மாவட்டக் காரியாதிகாரியினுல் உறுதிப் படுத்தப்பட்டு அனுப்புதல் வேண்டும்.

இத்திணைக்களத்துடன் இதுவரையில் ஒப்பந்தம் செய்து கொண்ட வர்கள், தற்போது விண்ணப்பிக்கும் மாவட்டத்தில் அல்லது பகுதியில் ஒப்பந்தம் செய்யாதிருந்தால், இதற்கு முன் எந்த மாவட்டத்தில் அல்லது பகுதியில் ஒப்பந்தம் செய்தவர்கள் என்பதைக் குறிப்பிடுதல் வேண்டும்.

18. இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகக் கடமையாற்றும் சிறைச் சாலை ஆணையாளருடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். இப் பதவிப் பெயர் அதனைத் தற்போது வகிப்பவரையும், இதன் பின் அப்பதவியை வகிப்பவரையும் குறிக்கும்.

19. மேற்கொண்ட விபரங்களைச் சிறைச்சாலைத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ஏ. ஏ. டி சில்வா,
பதில் சிறைச்சாலை ஆணையாளர்.

சிறைச்சாலைத் தலைமைக் காரியாலயம்,
கொழும்பு 9,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 12 ந உ.

12–720—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

'டம்பி லெவல்' ஒன்று வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

'டம்பி லெவல்' ஒன்று வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை, *1974.01.11 ஆந் திகதி முற்பகல் 11.00 மணி வரை காணி அபி விருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.*

2. கேள்விக்காரர் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம்:- முன்னைய இருப்பு, கிருலப்பனை மத்திய வேலைத்தலத் தில் விநியோகிக்கப்படவேண்டும். கேள்விக்காரர்கள் முந்திய விநி யோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50/- கட்டுப்பண மாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி, 1974-01-10 தேதி நண் பகல், 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டை கொழும்பு 1

காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப்பெற வேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காக குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையு முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " டம்பி லெவல் " ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது, தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1974.01.11 ந் திகதி முற்பகல் 11.00 மணிக்குக் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர்கள் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர் காணி அபிவிருத்தித் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1973.12.11.
சீரீ/2/462

12-684—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### விற்பனைத் திணைக்களம்

காங்கேசன்துறை, சுன்னாகம் ஆகிய இடங்களிலுள்ள விற்பனைத் திணைக்களத்தின் ஆஸ்பத்திரி விநியோகக் கிளைகளுக்கு 31.12.1974 வரை வாகன சேவை அளிப்பதற்கான விண்ணப்பப் பத்திரங்களை கொழும்பு 1, பிறிஸ்ரல் வீதி, பி. எஸ். எஸ். ஐ. கட்டிடம், விற்பனைத் திணைக்களத்திலுள்ள கேள்விச் சபைத் தலைவர் 28.12.73 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிவரை ஏற்றுக் கொள்வார்.

கட்டுப்பணமாக ரூபா 100 ஐ விற்பனைத் திணைக்களத்தில் அல்லது கொழும்பு தவிர்ந்த ஏனைய கச்சேரிகளில் கட்டி கேள்விப் பத்திர படிவங்களை கொழும்பு 1, பிறிஸ்ரல் வீதி, பி. எஸ். எஸ். ஐ. கட்டிடத்திலுள்ள விற்பனை அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்திலிருந்து 1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ம் திகதி நண்பகல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மேலும் விபரங்களை மேலே கொடுக்கப்பட்ட முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

என். வாமதேவா,
விற்பனை அபிவிருத்தி ஆணையாளருக்காக.

விற்பனைத் திணைக்களம்,
பி. எஸ். எஸ். ஐ. கட்டிடம்,
பிறிஸ்ரல் வீதி,
கொழும்பு 1,
10 திசெம்பர், 1973.

12-702—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### காணி ஆணையாளர் திணைக்களம்

அனுராதபுர மாவட்டத்தில் பின்வரும் கட்டுவேலைகள் செய்வதற்காக கொழும்பு த. பெ. இல. 500 காணி ஆணையாளர் திணைக்களத்திற் கேள்விச் சபைத் தலைவரால் 18.1.74 ந் திகதி பி. ப. 1.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலை விபரம் | தேவையான பதிவு ரூபா |
|---|---|
| (1) தேவகூவ குடியேற்றத் திட்டத்தில் புதுகேகின்ன பான்சாலை வீதியிலிருந்து வித்தியாசாலை வரையுமான வீதி ... | 50,000 |
| (2) காணி கொமிசனர் இலாகா சாரதிகள் இளைப்பாறும் இடம் (அனுராதபுரம்) ... ... | 30,000 |
| (3) கன்திரியாகமத்திலிருந்து பிதிவில்லாகம கா. அ. தி. காணிகளுக்கூடாக பகலவேம்புவரையுமான வீதி ... ... | 50,000 |
| (4) கொகோம்பகஸ்கட மேட்டு காணிகளுக்கு போகும் வீதி திருத்துதல் ... ... | 30,000 |
| (5) தேவகூவ குடியேற்றத் திட்டத்தில் வட்டக்கல சந்தியிலிருந்து பங்கல வீதி வரையுமான வீதி அமைத்தல் | 40,000 |

2. மேலேயுள்ள விபரங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள பணமும், அதற்கு மேலும் பெறுமதியான அரசாங்க திணைக்களங்களில் பதியப்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்களும் தொழில் சங்கங்களும் அனுராதபுர கச்சேரியில் 15.1.74 ந் திகதி பி. ப. 1 மணி வரையில் கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்.

3. கேள்விக்காரர்களுக்கு கேள்விப் பத்திரம் வழங்குவதற்கு முன்பு அனுராதபுர கச்சேரியில் 100 ரூபாவை வைப்புப் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டொன்றை அனுராதபுர அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அனுமதிக்கப்பெற்ற சங்கங்கள் கேள்விப் பத்திரங்களுக்கு பணம் செலுத்துவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளது. காசோலை, காசுக் கட்டளை, தபாற் கட்டளைகள் மூலம் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. கேள்விப் பத்திரங்கள் இருபிரதிகளில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரத்தையுடைய தபாலுறை சீலிடப்பட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் கொடுக்கப்படல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபாலில் அனுப்பப்படாது விடப்படுமிடத்து கொழும்பு, காலிமுகத் திடல் செயலகத்திலுள்ள 323 ம் இலக்க அறையில் இடப்படல் வேண்டும்.

5. கேள்விப் பத்திரங்கள் 18.1.74 ந் திகதி பி. ப. 2 மணிக்கு மேற்கூறப்பட்ட இடத்தில் உள்ள 320 ம் இலக்க அறையில் இடப்படல் வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தங்கள் கேள்விப் பத்திரம் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக அறிவித்தல் கிடைத்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளாவிடின் அல்லது ஏற்க மறுப்பின் அல்லது அதற்கு வேண்டிய வைப்புப் பணத்தை செலுத்தாவிடின் அன்னாரின் கேள்விக் கட்டுப்பணம் அரசாங்கத்திற்குரியதாக்கப்படும். அனுமதி அளிக்கப்பட்ட தொழிலாளர் சங்கங்கள், ப. நோ. கூ. சங்கங்கள், கி. மு. சங்கங்கள் வேலை பாரமெடுக்குமிடத்து பிணைப்பணம் கட்டுவதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளன.

7. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரினால் அறிவிக்கப்படும் விலாசத்திற்கு பதிவு செய்த தபாலில் கேள்வி ஏற்றுக்கொள்ளப்பட்டதென அறிவித்தாலோ அல்லது வேறு முறையில் அவ்விலா

சத்திற்கு அறிவித்தாலோ ஒப்பந்தகாரருக்கு அது கிடைத்ததெனக் கருதப்படும்.

8. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் வேலை செய்வதற்காக பயிற்றப்பட்டதும், பயிற்றப்படாததுமான வேலை ஆட்களை நியமித்தல் வேண்டும். அவ் வேலையாட்கள் கூடிய பக்கம் அந்தந்த வேலை செய்யும் தொகுதியிலிருந்து தெரிவு செய்து வேலைக்கமர்த்தல் வேண்டும்.

9. கொந்தராத்துக்காரர் குறிப்பிட்ட நிபந்தனைகள் எவற்றையேனும் சரியாக நிறை வேற்றத் தவறின் அன்னாரின் ஒப்பந்தம் ரத்து செய்வதற்கு ஏதுவாகும். இருந்தும் விசேடமாக ஒப்பந்தம் செய்த அதிகாரி ஒப்பந்தகாரர் இலங்கையர்களை வேலைக்கு அமர்த்தி இருப்பின் காணி, விவசாய அமைச்சின் நிரந்தர காரியதரிசியின் எழுத்து மூலம் பெற்ற அனுமதியுடன் அவ் ஒப்பந்தத்தை தொடர்ந்து செய்வதற்கு அனுமதி அளிக்கப்படும்.

10. இலங்கையரல்லாத வேலையாட்களை அனுமதியின்றி வேலைக்கு அமர்த்தி இருப்பின் ஒப்பந்தத்தை மீறி நடந்த குற்றமாக கருதப்படும்.

11. இவ் ஒப்பந்தத்தில் இலங்கையர் என்பது இலங்கை வம்சாவழியில் உள்ளவர் அல்லது இலங்கையராக பதிவு செய்யப்பட்டவர்களேயாகும்.

12. ஒப்பந்தகாரர் இவ் ஒப்பந்தத்தின் பிரகாரம் தனது அதிகாரத்தின் கீழ் வேலை செய்யும் எந்தப் பகுதி ஊழியர்கட்கும் தற்போது நடைமுறையிலிருக்கும், இனிமேல் நடைமுறைக்கு வரும் சம்பள வீத சட்டத்திற்கமைய வேதனம் அளிக்கப்படும்.

13. ஒப்பந்தகாரர் காணி ஆணையாளர் திணைக்களத்தில் உள்ள இவ் வேலைக்காக காணி ஆணையாளரிடமிருந்து அனுமதிபெற்ற அதிகாரிகள் எவரையேனும் எந்த நேத்தில். அவ்வேலை சம்பந்தமாக உள்ள கணக்குப் புத்தகங்கள், இடாப்புகள், வேலைப் பதிவேடுகள், மற்றும் இது சம்பந்தமாக உள்ள வேலைக்குப் பாவிக்கப்படும் புத்தகங்களை பார்ப்பதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும்.

14. இதனைப்பற்றி வேறு விபரங்கள் அறிய விரும்பின் அரசாங்க அதிபர், அனுராதபுர மாவட்டம் அவர்களிடமிருந்து மனுச் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

பி. வி. வன்னிநாயக்கா,
உதவி அரசாங்க அதிபர்,
அரசாங்க அதிபருக்காக,
அனுராதபுர மாவட்டம்.

அரசாங்க செயலகம்,
அனுராதபுரம்,
1973 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 6 ந் திகதி.

12-658—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

எனது என் என்ஆர். எஸ். 38

**கூலிகளுக்கும், போக்குவரத்து சேவைகளுக்குமான கேள்விகள் 1974**

கிழ்வரும் நெல் சந்தைப்படுத்தல் சபை நெற்களஞ்சியங்களுக்கு கூலிகள் விநியோகிப்பதற்கும், போக்குவரத்து சேவைகள் வழங்குவதற்குமான கேள்விகள், கிளிநொச்சி நெல்சந்தைப்படுத்தல் சபை பிரதேச அதிகாரியினால் கோரப்படுகின்றன.

1. பூநகரி
2. துணுக்காய்
3. கண்டாவளை

} யாழ்ப்பாண மாவட்டம்

4. மாங்குளம்
5. புளியங்குளம்
6. நெடுங்கேணி
7 முள்ளியவளை
8. முல்லைத்தீவு

} வவுனியா மாவட்டம்

விண்ணப்பப் பத்திரங்களும், நிபந்தனைகளும், பிரதேச காரியாலயம் நெல் சந்தைப்படுத்தல் சபை கிளிநொச்சியில் ஒவ்வொரு நெற்களஞ்சியங்களுக்கும் முன்பணமாக ரூபா ஐம்பது செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விகள் முடிவு திகதி 31.12.1973 நண்பகல் 12 மணி. விண்ணப்பப்பத்திரங்களை 29.12.73 நண்பகல் 12 மணிவரை இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதேச அதிகா, வ. பி.
நெல்சந்தைப்படுத்தல் சபை, கிளிநொச்சி.

12-613—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

குறிப்பு இல. எல். டி./01-11

**காணிக் கொமிஷனர் இலாகா**

இரத்தினபுரி மாவட்டத்தில் கீழ் குறிப்பிடும் கட்டிட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிவரை கொழும்பு, தபாற் பெட்டி இல. 500, காணிக் கொமிஷனர் இலாகா கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| வேலையின் விபரம் | வேண்டிய பதிவுத் தொகை ரூபா |
|---|---|
| 1. மிதெலெனகொட மாதொள கொளனி பாதை அமைத்தல் ... ... | 1,00,000 |
| 2. ஹலுத கொளனிக்கு நீர் விநியோகத் திட்டம் அமைத்தல் ... ... | 30,000 |
| 3. கல்ஹீர மல்மீகந்த பாதை 1 ம் மைல் 2 ம் பாதி கல் போட்டுத் தார் ஊற்றுதல் ... | 25,000 |

2. கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள், 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 7 ம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணி வரை மேல் கூறப்பட்ட தொகைகளுக்கு அரசாங்க இலாகாக்களில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும்.

3. கேள்விக்காரர்கள் ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 100 வைப்புப் பணமாக இரத்தினபுரிக் கச்சேரியில் அல்லது வேறு கச்சேரியில் அல்லது கொழும்பு பொதுத் திறைசேரியில் கட்டிப் பற்றுச்சீட்டுக் காட்டிய பின்னரே கேள்விப்பத்திரங்களுக்கான வெற்றுப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

4. மேற்கூறிய தொகைகளுக்கு நீர்ப்பாசன, பகிரங்க வேலை, கல்வி இலாகாக்களில் பதிவு செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குச் சங்கங்கள், பல்நோக்குக் சமாஜங்கள் உட்பட பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவையும் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம். அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் கேள்விப்பத்திர வைப்புப்பணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை. பதிவு செய்யப்பட்டதற்கான பதிவை சமர்ப்பித்த பின்னரே கேள்விக்கான வெற்றுப் பத்திரங்கள் வழங்கப்படும்.

5. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியில் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் உறையில் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயரும், கேள்விக்காரரின் பெயர், விலாசம் ஆகியவைகளும் குறிப்பிட்டிருக்க வேண்டும். கேள்விப் பத்திரம் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அதைக் கேள்விக்காரர் தாமாகவே கொழும்பு, காலி முகப்பு செக்கிரட்டேரியட் கட்டிடத்தில் 3 ம் மாடியின் 320 இலக்க அறையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பத்திரப் பெட்டியில் இடல் வேண்டும்.

6. கேள்விப்பத்திரங்கள் 1974 ம் ஆண்டு ஜனவரி மாதம் 11 ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மேற்கூறப்பட்ட 320 ம் இலக்க அறையில் திறக்கப்படும்பொழுது கேள்விக்காரர்களோ அல்லது அவர்களுடைய பிரதிநிதிகளோ சமூகமாயிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

7. கேள்விக்காரர்கள் இலங்கைத் தொழிலாளர்களை மட்டும் வேலைக்கமர்த்த வேண்டும்.

8. மேலதிக விபரங்களை இரத்தினபுரி அரசாங்க அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ஸீ. மாணிகவாசகர்,
மேலதிக அரசாங்க அதிபர்,
இரத்தினபுரி மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

இரத்தினபுரிக் கச்சேரி,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 10 ந் வ.

12-700—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

### நீர்ப்பாசன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சு

வெற்றுத் தார்ப்பீப்பாய்கள் வெற்று உருக்குத் தகரங்கள், வெற்று சீமெந்து உறைகளைக் கொள்வனவு செய்து அப்புறப்படுத்தற்கான கேள்விப் பத்திரங்கள்.

நீர்ப்பாசன, மின்சக்தி பெருந்தெருக்கள் அமைச்சின் பொறியியற் சேவை அமைப்பு வேலைகள் பணிப்பாளர், வடமேல் மாநிலம், குருநாகல் திணைக்கள கேள்விப் பத்திர சபைத் தலைவர் இலங்கையரிடமிருந்தும் இலங்கைத் தாபனங்களிடமிருந்தும் கீழ்க்காணும் பொருட்களைக் கொள்வனவு செய்து அப்புறப்படுத்தற்கான கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்வார்.

(1) சாதாரண வெற்றுத் தார்ப்பீப்பாய்கள்
(2) வெற்று உருக்குத் தார்ப்பீப்பாய்கள்
(3) வெற்று சீமெந்து உறைகள்

(2) 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ம் திகதி காலை 10 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் முடிவடையும். அமைச்சின் எந்த ஒரு மாநில காரியாலயத்திலோ அல்லது யாழ்ப்பாணம் பதுளைக் கச்சேரிகளிலோ கேள்வி வைப்புப் பணமாக ரூபா 100 செலுத்தியதற்கான பற்றுச் சீட்டைச் சமர்ப்பித்த விடத்து, 1973 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ம் திகதி காலை 9.30 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும். 1974 ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ம் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

(3) 1.1.1974 ம் திகதி தொட்டு 30.6.1974 வரையிலான 6 மாத கால ஒப்பந்தம்.

(4) மேலும் இது சம்பந்தமான விபரங்கள் வடமேல் மாநிலம் குருநாகல், வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. வி. ஏ. சேனரத்ன,
வேலைகள் பணிப்பாளர்,
வடமேல் மாநிலம்.

வேலைகள் பணிப்பாளர் காரியாலயம்,
வடமேல் மாநிலம்,
குருநாகல்.
7.12.73.

12-663—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### குறுகிய கால கேள்விப் பத்திர அறிவிப்பு

**பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மோட்டார் லொறிகள், உழவு இயந்திரங்கள், மோட்டார் டிப்பர்கள் மற்றும் இயந்திரங்களைக் குறித்த கூலியில் வாடகைக்கமர்த்துவதற்கும், குறித்த கூலியில், மற்றும் நானாவித சேவைகளுக்கு ஒப்பந்தகாரரைப் பதிவு செய்வதற்குமான கேள்விப்பத்திரங்கள்**

1974 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 1 ம் திகதி தொடக்கம் 11 மாத காலத்துக்கு பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மோட்டார் லொறிகள், உழவு இயந்திரங்கள் மோட்டார் டிப்பர்கள் ஆகியவற்றைக் குறித்த கூலியில் வாடகைக்கமர்த்தவும், மண்வெட்டல், காடுதிருத்தல் போன்ற சேவைகளுக்கு மற்றும் இயந்திரங்களைக் குறித்த கூலியில் வாடகைக்கமர்த்தவும், மற்றும் நானாவித சேவைகளுக்கு ஒப்பந்தகாரரைப் பதிவு செய்வதற்குமான கேள்விப்பத்திரங்களை நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின், வடமேல் மாநில, ஆள்புல வேலைகள் பணிப்பாளர் காரியாலய கேள்விப் பத்திர சபைத்தலைவர், இலங்கையரிடமிருந்தும், இலங்கைத் தாபனங்களிடமிருந்தும் ஏற்றுக் கொள்வார்.

(2) 15.1.1974 காலை 10 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இக்காரியாலயத்திலோ, அல்லது வேறு எந்த வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்திலோ, அல்லது யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளை கச்சேரிகளிலோ கேள்வி வைப்புப் பணமாக ரூபா 25 செலுத்தியதற்கான பற்றுச்சீட்டை சமர்ப்பித்த விடத்து 11.1.1974 மாலை 2 மணிவரை கேள்விப் படிவங்கள் வழங்கப்படும்.

(3) மேலதிக விபரங்களை குருநாகல், கண்டி வீதியில் உள்ள வடமேல் மாநில வேலைகள் பணிப்பாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

டி. வி. ஏ.சேனரத்ன,
வேலைகள் பணிப்பாளர்,
வடமேல் மாநிலம்,
குருநாகல்.

வேலைகள் பணிப்பாளர் காரியாலயம்,
வடமேல் மாநிலம்,
கண்டி வீதி,
குருநாகல்.

12-697—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

சுத்திகரித்தற்சாலைப் பகுதி

**இறப்பர் மரங்கள் சீவுவதற்கான கேள்வி**

சபுகஸ்கந்தையில் உள்ள "விரிரிங்ரன் எஸ்ரேட் ஹவுசிங் கொலனியில்" ஏறக்குறைய 700 இலக்கங்கள் கொண்ட (ஏறக்குறைய 275 புதிய மரங்கள் கொண்ட) இறப்பர் மரங்களைச் சீவுவதற்கான பொறியிட்ட கேள்விகள் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும். இத்தோட்டத்திற்கு வாகனங்கள் செல்லக்கூடிய வீதி அமைக்கப்பட்டுள்ளது. கேள்விப்பத்திரங்களை சுத்திகரித்தற்சாலையின் நிதிப்பிரிவில் வைப்பாக ரூபா 50 (இதில் ரூபா 40/- மீளளிக்கக்கூடிய) கட்டி கீழே கூறப்பட்டுள்ளவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விகள் 11.01.1974 ஆந் தேதி பிற்பகல் 2.30 மணியுடன் முடிவடையும்.

சிரேட்ட அலுவலக எந்திரி.

இ. பெ. கூ. எண்ணெய் சுத்திகரித்தற் சாலை,
சபுகஸ்கந்தை,
த. பெ. இல. 11,
களனி.

12-727—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### பிரதேசப்—பொறியியல் நிறுவனம் வடமேல் பிராந்தியம்

நவகத்தேகமப் பிரிவு—புத்தளம்

**நீர்ப்பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்**

கீழ்க் குறிப்பிட்டவாறான நீர்ப்பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை புத்தளம் நவகத்தேகமப் பிரிவு நிர்வாகப் பொறியியலாளர் 31.1.74 முற்பகல் 11.00 மணிவரை ஏற்றுக்கொள்வார்.

"இரு நீர்ப்பம்பிகள் 2" விட்டம் உறிஞ்சு குழாய் 25 அடி விநியோகக் குழாய் 35 அடி கொள்ளளவு மணித்தியாலத்துக்கு 1500/2000 கலன்வரை. 'சென்றிபியுகல்' தன்னியக்க முறையிலானவை. சுழலி வெண்கலத்திலானது. அடி வால்வுடன் கூடிய பூரண பாகங்களுடன் விநியோகித்தல் வேண்டும். இயந்திரம் பெட்ரோலினாலோ, மண்ணெண்ணெய்யினாலோ அல்லது டீசலினாலோ இயக்கப்படக் கூடியதாகவிருக்கலாம். இயந்திரமும் பம்பியும் தனித்தனியாக இணைக்கப்பட்டு ஒரு சட்டத்தில் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்."

2. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது ஏதாவதொரு கச்சேரியிலோ செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டை சமர்ப்பிப்பதன் மூலம் 30.1.74 முற்பகல் 12.00 மணிவரை புத்தளம் சேவிஸ் பாதையிலுள்ள நவகத்தேகமப் பிரிவு நிர்வாகப் பொறியியலாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரப் படிவங்களைப் பெற்றும், அனுப்பத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்கள் அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடியுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நீர்ப்பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிட்டு, நிர்வாகப் பொறியியலாளர், நவகத்தேகமப் பிரிவு, புத்தளம் என முகவரியிட்டு பதிவுத் தபாலிலேனும் அல்லது நேரடியாகவேனும் சமர்ப்பிக்கலாம்.

5. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழுவிவரங்களையும் சமர்ப்பித்தல் வேண்டும். ஏற்றுக்கொண்ட விவரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக்காட்டல் வேண்டும்.

6. தேர்வுபெற்ற கேள்விக்காரர்கள் விநியோகத்தில் தவறிழைப்பின் அவரின் வைப்புப் பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன், அதன்பின் அரசாங்க வேலை ஒப்பந்தங்கள் பெறமுடியாதவாறு தவறிய கேள்விக்காரர்கள் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

7. புத்தளம், நவகத்தேகமப் பிரிவு நிர்வாகப் பொறியியலாளர் காரியாலயத்தில் 31.1.74 நண்பகல் 12.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும்.

8. கேள்விப்பத்திரத்தில் எவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் ஏற்க அல்லது நிராகரிக்க அரசுக்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

9. மேலதிக தகவல்களை இக் காரியாலயத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பொ. சண்முகதாசன்,
நிர்வாகப் பொறியியலாளர்.

நிர்வாகப் பொறியியலாளர் அலுவலகம்,
நவகத்தேகமப் பிரிவு,
புத்தளம். 1973.10.30.

12–584—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

நீர்ப்பாசன, சக்தி, நெடுஞ்சாலைகள் அமைச்சு

மகாவலி அபிவிருத்திச் சபை

மகாவலி கங்கை அபிவிருத்தி—திட்டம் 1

குருலுவெவை வித்தரிப்பு—ஒப்பந்தம் 1

6 மைல் நீளமுள்ள கந்தளாமை—குருலுவெவை வாய்க்கால், அதனுடன் சேர்ந்த அமைப்பு வேலைகளின் நிர்மாணத்தை உள்ளடக்கிய "குருலுவெவை வித்தரிப்பு—ஒப்பந்தம் 1" க்கான பொறியிட்ட கேள்விப்பத்திரங்களை தலைவர், மகாவலி அபிவிருத்திச் சபை அழைக்கின்றார்.

வேலையின் பிரதான அம்சங்கள் பின்வருமாறு :—

சுமார் 90,000 கனயார் பொதுவான பொருள், 30,000 கனயார் பாறை அகழ்தல், ஒற்றையடிப் பாலங்கள், நீரிடைப் பாதைகள், தெரு மதகுகள், வடிகாலமைப்புக் கடவைகள், பாய்கான்கள், கவர்பாடு அமைப்பு முதலியன அடங்கிய சுமார் 40 கொங்கிறீற் அமைப்புகளை நிர்மாணித்தல். வாய்க்கால் கரைக்கட்டுக்களுக்கு சுமார் 65,000 கனயார் நெருக்கமான நிரவல் தேவை.

கேள்விகள் "அரசாங்க முகவர் நிலையங்களி"லிருந்தும், அஃதாவது சிவில் எந்திரவியல் நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட நியதிச் சட்ட முறையிலான அரசாங்க சபைகள், கூட்டுத்தாபனங்கள், "உள்ளூர் ஒப்பந்தக்காரர்களி"டமிருந்தும், அஃதாவது சிவில் எந்திரவியல் நிர்மாண வேலைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்க திணைக்களங்களிலும், கூட்டுத்தாபனங்களிலும் 1,00,000 ரூபாவுக்கு மேல் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள், கோரப்படுகின்றன.

கேள்வி கோரவிருக்கும் "உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள்" பின்வரும் தகவல்களை கேள்விப்பத்திரங்கள் வாங்குவதற்கு மனுச் செய்யும் பொழுது சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) முடிக்கப்பட்ட வேலைகள், கையிலிருக்கும் வேலைகள் தொடர்பாக இன்றுவரையும் நிரப்பப்பட்டு, பதிவு செய்யப்பட்ட பதிவுப் புத்தகம், அல்லது

(ஆ) முடிக்கப்பட்ட வேலைகள், கையிலிருக்கும் வேலைகளைக் குறிக்கும் சான்றிதழ்கள். ஒப்பந்தத்தின் பெறுமதி மற்றும் விபரங்களுடன் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

மேலே கேட்கப்பட்டதற்கமைய, தரப்பட்டுள்ள தகவல்கள் திருப்தியாய் இல்லாவிட்டால், ஒப்பந்தக்காரர் கேள்விப்பத்திரங்களை வாங்குவதற்குத் தகவுடையவரற்றவராவர். ஒவ்வொரு தொகுதியிலும் I தொடக்கம் IV பகுதிகளைக் கொண்ட முதல் 3 தொகுதிகளில் கேள்விப்பத்திரங்களை 75/- ரூபா கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம். 73-12-21 ந் திகதிக்குப் பின்னர் கேள்விப் பத்திரங்கள் வாங்குவதற்குக் கிடைக்கக்கூடியதாயிருக்கும். கேள்விகள் 74-01-15 ல் முடிவடையும். இவ்வொப்பந்த வேலை 74-12-31 ல் முடிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கேள்விப் பத்திரங்களைப் பின்வரும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம் :—

தலைவர்,

மகாவலி அபிவிருத்திச் சபை,

11, யாவத்தை வீதி,

கொழும்பு 5.

எச். டீ. எஸ். மனம்பேரி,
தலைவர்,
மகாவலி அபிவிருத்திச் சபை.

மகாவலி அபிவிருத்திச் சபை,
11, யாவத்தை வீதி,
கொழும்பு 5,
73.12.14.

12-831—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91.

---

# பொருட்கள் விற்பனையும், பிறவும்

காட்டுத் திணைக்களம்—ஏலவிற்பனை

மட்டக்களப்பு வெல்லாவெளி வட்டாரத்தில் பல இடங்களில் பறிமுதல் செய்யப்பட்ட பல இனங்களைக் கொண்ட மரங்களும் இரட்டை மாட்டு வண்டி ஒன்றும் மட்டக்களப்பு மாவட்ட வன பரிபாலன அதிகாரியால் 10.1.74 காலை 10 மணிக்கு வெல்லாவெளிப் பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

கேட்க விரும்புவோர் ஏலவிற்பனைக்கு முன்னதாகவே மரங்களைப் பார்வையிடும்படி கோரப்படுகின்றனர்.

ஏலவிற்பனை பற்றிய முழு விபரங்களும் கீழ்க் கையொப்பமிட்டவரிடமோ அல்லது மேற்கூறிய வெல்லாவெளி பகுதி வட்டார வன அதிகாரியின் காரியாலயத்திலோ பெற்றுக்கொள்ளலாம்.

டபிள்யு. ஜே. ஜே. மேதர்,
மாவட்ட வன பரிபாலன அதிகாரி, கி. பி.,
மட்டக்களப்பு.

மாவட்ட வன பரிபாலன காரியாலயம்,
மட்டக்களப்பு. 29.11.1973.

12-722—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91.

### பிரசித்த ஏலவிற்பனை

நீதிமன்றம், சாவகச்சேரி

இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருவது என்னவென்றால் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள கோட்டால் அறவிடப் பட்டதும், சொந்தக்காரரால் குறிக்கப்பட்ட கால எல்லைக்குள் கோரப்படாததுமான, சாவகச்சேரி நீதிமன்றத்தில் சேர்க்கப்பட்டுள்ள பொருட்கள் 1973, மார்கழி மாதம் 27 ந் திகதி காலை 10.00 மணியளவில் சாவகச்சேரி கோட்டில் பிரசித்த ஏலத்தில் யாழ்ப் பாணப் பிரதேச பரிபாலனச் செயலாளர் திரு. கே சீவரத்தினம் முன்னிலையில் விற்கப்படும்.

விற்பனைப் பொருட்களை அன்று காலை 9.00 மணி தொடக்கம் காலை 10.00 மணி வரைக்கும் கோட்டில் பார்வையிடலாம்.

விற்பனையில் வாங்கிய பொருட்களை வாங்கியவர்கள் விற்பனை முடிவடைந்ததும் உடனடியாக கொண்டு செல்லுதல் வேண்டும்.

| வழக்கு இலக்கம் | பொருள் விபரம் |
|---|---|
| 8519 | உழவு யந்திர எஞ்சின் பாகங்கள் சில. |
| ஏ/263/72 | ஒரு சிறு ஆவண உறை (கறுப்பு) |
| | ஒரு பவுண் மோதிரம் அண்ணளவாக 1½ பவுண். |
| | ஒரு இரும்பு மோதிரம். |
| | ஒரு கைச்சங்கிலி. |
| | ஒரு தங்க மோதிரம் கிட்டதட்ட ¾ பவுண். |
| | ஒரு தங்கச் சங்கிலி 6 பவுண். |
| | ஒரு நாசினல் ரான்சிஸ்ர ரேடியோ. |
| ஏ. 5/73 | ஒரு உளி. |
| | இரண்டு மாபிள் கோப்பைகள். |
| ஏ. 20/73 | 16 பிளாஸ்ரிக் கிளாஸ், சவுக்காரப் பெட்டி, பவுடர் பெட்டி, கோப்பைகள். |
| 28920 | ஒரு றலி சைக்கிள் சட்டம் இல. எ. வி. 4507 மும், சீற்றுடன் ஒரு சாக்கு, இரண்டு சேறு தாங்கிகள், சில்லு, சங்கிலி முதலியன. |
| | ஒரு ரேட் மாஸ்ரர் சைக்கிள் இல. டி. ரி. 1890. |
| 25448 | ஒரு அரிக்கன் விளக்கு. |
| 27505 | ஐந்து கைபிடியுடைய கோடாரி. |
| 8514 | ஒரு அரிக்கன் விளக்கு. |
| பலவினங்கள் | வெற்றுப் போத்தல்கள். |
| | கிளாசுகள். |

சோ. யோகநாதன்,
நீதவான், சாவகச்சேரி.

நீதவான் நீதிமன்றம்,
சாவகச்சேரி, 10.12.73.

12-705—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

---

### அநுராதபுர திறந்த வெளிக் கைதிகள் முகாமில் எருதுகள் ஏல விற்பனை செய்தல்

அநுராதபுர திறந்தவெளிக் கைதிகள் முகாமில் கீழே குறிக்கப்பட்டுள்ள இன எருதுகள் 7.1.74 ம் திகதி, மு. ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனையில் விற்கப்படும். இத்தருணத்தில் இந்த எருதுகளை ஏலவிற்பனையில் வேண்டுவதற்கு விரும்புவோர் அன்றய தினம் அநுராதபுர திறந்த வெளிக் கைதிகள் முகாமில் குறிக்கப்படும் விலைக்கு வேண்டும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

| வயது | இனம் | தொகை | ஆண்/பெண் |
|---|---|---|---|
| வருடம் 13 .. | சிண்டி .. | 3 .. | பெண் |
| வருடம் 12 .. | சிண்டி .. | 1 .. | பெண் |
| வருடம் 11 .. | சிண்டி .. | 2 .. | பெண் |
| வருடம் 10 .. | சிண்டி .. | 1 .. | பெண் |
| வருடம் 09 .. | சிண்டி .. | 1 .. | பெண் |
| வருடம் 08 .. | சிண்டி .. | 2 .. | பெண் |
| வருடம் 02 குறைந்தவை .. | சிண்டி .. | 7 .. | ஆண் |
| வருடம் 11 மாதம் 6 .. | சிண்டி .. | 7 .. | பெண் |

ஈ. ஏ. த. சா. பண்டாரநாயக,
அதிகாரி, அநுராதபுர சிறைச்சாலை.

சிறைச்சாலை அதிகாரி அலுவலகம்,
அநுராதபுர சிறைச்சாலை,
1973 ம் ஆண்டு டிசம்பர் மீ 03 ந் உ.

12-719—21.12.73 ந் திகதிய வர்த்தமானி இல. 91

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமைதோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக் குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள் ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும். | | |
|---|---|---|---|---|---|
| திசெம்பர் | 07.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 05.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்.
கொழும்பு,
1972 ம் ஆம் ஒகத்து மீ 18 ந உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.